**உக்குவெல பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உக்குவெலபிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022திசெம்பர் 31 இல் உள்ளவாறு உக்குவெலபிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை

வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பிரகாரம் ஓவில்ல மயானத்தின் பெறுமதி ரூபா 10,000 ஆக இருந்த போதும் அது நிதிக் கூற்றில் ரூபா 160,000 என ரூபா 150,000 என் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.. | சொத்துக்களின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் உடைத்து அகற்றப்பட்ட உக்குவல பொது நூலகத்தின் கிரயம் ரூபா 1,659,435 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கபட்டிருந்தன | 2023ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது சீராக்குவதாக | நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வான்டின் உக்குவள பொது வியாபார சந்தையின் முதலாம் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் அதன் பெறுமதியான ரூபா 6,357,503 தொகை மூலதனமாக்கப்பட்டுஇருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது மூலதனம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிர்மாணங்கள் மூலதனம் ஆக்கப்பட வேண்டும் |
| (ஈ) | அறிவித்தல் பதாகை வருமானத்திலிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்த வேண்டிய ரூபா 26,542 ஆன வரி ஆண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது சீராக்குவதாக | கணக்கு சீராக்கப்பட வேண்டும் |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககளுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 08 ஆம் பிரிவு | கும்பியன்கொடையில் அமைந்துள்ள ஒரு வியாபார நிலையத்தை பரீட்சித்த 2023 பெப்ரவரி 07 ஆம் திகதியில் உள்ளவாறு சிற்றுண்டிச்சாலை ஒன்று நடத்திச் செல்லப்பட்டிருந்ததுடன் அதுவரை அதற்குரிய கட்டிடத்திற்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்கவில்லை அதன் பிரகாரம் வியாபார அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கப்பட்ட 2021 ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 516 நாட்களுக்காக ரூபா 25,800 கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | இக் கட்டிடத்திற்குரிய தாக சட்ட நடவடிக்கை காணப்படுவதால் இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கு முடியாத இருந்ததாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டு நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) விதி 59 | அனுமதிப்பத்திர கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை | அனுமதி பத்திர கணிப்பீடு தற்போது மேற்கொள்ளப்பட்டு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) விதி 61 | பீஎஸ் 26 ஏ படிவத்தின் பிரகாரம் கைத்தொழில் வரி பதிவேடு தயாரிக்கப்படாமை காரணமாக 65 ஆம் விதியின் பிரகாரம் கொடுப்பனவு தவிர்ப்பு செய்பவர்களை இனங் காண்பதற்கு முடியாதிருந்தது. | தற்போது குறித்த பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (iii) விதி 218 | 2017 திசெம்பர் 31 பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்வதாக | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோஸலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி 1646 | சபைக்குரிய 16 வாகனங்களின் நாளாந்த ஓட்ட பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 12,596,982 தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணி செல்லப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டிலிருந்து நாலாவது வரையாக்கி பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| (i) | 10 ஆம் பந்தி | உக்குவல பொது சந்தையின் 06 கடைகளை குத்தகையாளர் களால் மாதாந்தம் ரூபா 6,000 முதல் ரூபா 15,000 வரை தொகைக்கு வேறு தரப்பினருக்கு உபகுத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | சபையுடன் உடன்படிக்கை செய்துள்ள கடை உரிமையாளர்க ளால் வியாபார அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளப்பட்டுள் ளதாக | - மேற்படி - |
| (ii) | 5(1) ஆம் பந்தி | 59 கடைகளுக்காக 2011 ஆம் ஆண்டு முதல் ஒரே கட்டணம் தொடர்ந்தும் அறவிடப்பட்டு வந்தது | விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் தாமதத்தினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவி ல்லை என | - மேற்படி - |
| (ii) | 06 ஆம் பந்தி | 2020 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்ட புதிய மதிப்பீட்டின் பிரகாரம் பொது வியாபார சந்தை தொகுதி 45கடைகளின் உடன்படிக்கையை புதுப்பிக்காமல் இருந்ததுடன் அதில் 13 கடைகள் 2000ம் ஆண்டின் பின்னர் 22 ஆண்டு காலமாக உடன்படிக்கையை புதுப்பித்திருக்கவில்லை | திருத்தப்பட்ட மதிப்பீடு கிடைத்த பின்னர் உடன்படிக்கைகை ய புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 32,311,456 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 34,019,555 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,101,000 | 2,111,813 | 2,425,177 | 449,710 | 2,181,000 | 3,039,768 | 2,830,709 | 763,074 |
| (ii) | வாடகை | 4,000,000 | 1,239,710 | 1,416,971 | 446,717 | 5,480,000 | 5,268,254 | 4,762,908 | 623,978 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,110,000 | 546,330 | 546,330 | - | 2,030,000 | 1,496,402 | 1,496,402 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,000,000 | 3,749,009 | 4,437,448 | 1,579,564 | 39,040,269 | 47,036,581 | 48,899,248 | 39,194,681 |
| | | 12,211,000 | 7,646,862 | 8,825,926 | 2,475,991 | 48,731,269 | 56,841,005 | 57,989,267 | 40,581,733 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| வீதவரி அலகொன்றினல் ரூபா 1,000 இற்கு மேற்பட்ட நிலுவையயான 138 வீதவரி அலகுகளிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறுஅறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 378,249ஆக இருந்தது. | எதிர்காலத்தில் நடமாடும் சேவைகளை நடத்தி ஆதனங்களை தடை செய்வதில் இருந்து எஞ்சிய தொகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டு நிலுவை மீதிகள் அறவிட வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

| | | | |
|---|---|---|---|
| | பொது வியாபார சந்தை கட்டிடத்தின் 8 கடைகள் 2021 திசெம்பர் 21 ஆம் திகதி மற்றும் மேலும் 08 கடைகள் 2022 ஜுலை 14 ஆம் திகதி நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டு இருந்தது எனிழனும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தினால் கடைகளை குத்தகைக்கு வழங்க முடியாமல் இருந்ததன் காரணமாக கடைகளை குத்தகைக்கு வழங்க முடியாதிருந்தது. இதன் காரணமாக அக்காலப்பகுதிக்காக பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்த ரூபா 432,000 ஆன குத்தகை வாடகை இழக்கப்பட்டு இருந்தது. | 2019 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட நிலைமை அடிப்படையில் மின்சார சாபையிடமிருந்து வழங்கலை பெற்றுக் கொள்வது கொள்வதில் தாமதம் ஏற்பட்டதாக.<br><br>அறவிடமுடியாத நிலுவை | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட கடைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | சபை அதிகார பிரதேசத்தில் 149 முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் அளவில் உரிய கட்டணத்தை சபைக்கு செலுத்தி இருந்ததுடன் எஞ்சிய 67 முச்சக்கர வண்டிகள் இருந்து ரூபா 40,200 ஆன கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | 2023 ஆம் ஆண்டின் நிலுவை கட்ட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 11,298,759ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக குழுக்களாக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி நடமாடும் சேவைகளை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கைத்தொழில் கடன் கொடுத்தோர் ரூபா 21,805,816ஆக இருந்தது. | 2023 ஆம் ஆண்டில் அந்நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உக்குவல பிரதேச | கையேற்பதற்கு | |

| | | |
|---|---|---|
| சபையால் மயான பூமியாக பயன்படுத்தப்படுகின்ற 46 காணி துண்டுகள் மாவட்ட காணி சீரமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான 03 மயானங்கள் உட்பட) உரித்தினை கையேற் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர் மற்றும் காணி சீர்திருத்த அதிக சபைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதி இல் உள்ளவாறுசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 10 பதவிகளில் 17 வெற்றிடங்களும் ஒரு பதவிக்குரியதாக 09 மிகைகளும் காணப்பட்டன. | ஆரம்ப சேவை வகுதியில் வெற்றிட பதவிகளுக்காக பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் அனைத்து ஆட்சேர்ப்புகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலும் முன்னைய4 ஆண்டுகளிலும் கட்டிட அபிவிருத்தி அனுமதி பத்திரங்களுக்காக 2,219 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 1,992 அங்கீகரிக்கப்பட்டிருந்தன அக்காலப் பகுதியில் 64இணக்க சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அத்தோடு அங்கீகரிக்கப்படாத 227 விண்ணப்பங்கள் தொடர்பாக பின் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு எழுத்து மற்றும் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்ட போதும் இணக்கச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதில் தாமதப்படுத்தியுள்ளதாக | இணக்கச் சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 20 செலவின விடயங்களில் 41 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 34 வருமான விடயங்களில் 51 சதவீதம் முதல் 100 சதவீதத்தை மிகைத்த விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலங்களில் பாதீட்டை தயாரிக்கும் போது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டும்கவனத்து டனும் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |